சுருக்கம்

சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை - ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டம் - குழந்தைகள் மையங்களில் முட்டை சாப்பிடாத குழந்தைகளுக்கு ரூ.1.25 விலையில் வாங்கி வழங்கப்பட்டு வரும் வாழைப்பழத்தின் விலையினை ரூ.3.50 ஆக உயர்த்தி வழங்குதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் (சந-7(1)) துறை

அரசாணை (நிலை) எண்.53

நாள் 23.08.2022
திருவள்ளுவராண்டு 2043
சுபகிருது, ஆவணி 7
படிக்க

1. அரசாணை (நிலை) எண்.85, சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத்துறை, நாள் 14.07.2008.
2. அரசாணை (நிலை) எண்.176, சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத்துறை, நாள் 17.09.2010.
3. அரசாணை (நிலை) எண்.77, சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத்துறை, நாள் 12.10.2018.
4. இயக்குநர் மற்றும் குழும இயக்குநர், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் அவர்களின் கடித ந.க.எண்.9202/சஉதி/2021, நாள் 10.12.2021, 28.12.2021, 16.02.2022, 25.04.2022 மற்றும் 02.06.2022.

+++++

ஆணை:-

மேலே முதலாவதாக படிக்கப்பட்ட அரசாணையில், ஏனையவற்றுடன் சத்துணவுத் திட்டத்தில், முட்டை சாப்பிடாத குழந்தைகள் மற்றும் மாணவ மாணவியர்களுக்கு (2 வயது முதல் 15 வயது வரை உள்ள பயனாளிகள்) மாற்று உணவாக சுமார் 100 கிராம் எடையுள்ள ஒரு வாழைப்பழம் (ripened banana) திங்கள், புதன் மற்றும் வியாழக்கிழமைகளில் வழங்கவும், ஒரு வாழைப்பழத்தின் விலை ரூ.1.25க்கு மிகாமல் இருக்க வேண்டும் எனவும் ஆணையிடப்பட்டது. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், ஏனையவற்றுடன் பள்ளிகளில் சத்துணவு உட்கொள்ளும் ஒன்றாம் வகுப்பு முதல் பத்தாம் வகுப்பு வரை பயிலும் முட்டை உண்ணாத மாணவ / மாணவியர்களுக்கு வாரத்தில் ஐந்து நாட்களிலும் வாழைப்பழம் வழங்க ஆணையிடப்பட்டுள்ளது. மேலும், மேலே மூன்றாவதாக படிக்கப்பட்ட அரசாணையில், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் சத்துணவுத் திட்டப் பயனாளிகளில், முட்டை உண்ணாத மாணவ/ மாணவியர்களுக்கு வழங்கப்படும்

வாழைப்பழத்தின் விலையை, ஒரு வாழைப்பழத்திற்கு ரூ.1.25 லிருந்து ரூ.3.50 ஆக உயர்த்தி வழங்கி ஆணையிடப்பட்டுள்ளது.

2. இயக்குநர் மற்றும் குழும இயக்குநர், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் அவர்கள் மேலே நான்காவதாக படிக்கப்பட்ட கடிதங்களில், குழந்தைகள் மையங்களில் சத்துணவு சாப்பிடும் 2 முதல் 6 வயதுடைய குழந்தைகளில், முட்டை சாப்பிடாத குழந்தைகளுக்கு மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையின்படி ரூ.1.25 விலையில் வாழைப்பழம் வாங்கி வழங்கப்பட்டு வருகிறது என்றும், தற்பொழுது உணவுப் பொருட்களின் விலை ஏற்றத்தினை கருத்தில் கொண்டு குழந்தைகள் மையங்களில் முட்டை சாப்பிடாத குழந்தைகளுக்கு வழங்கப்பட்டு வரும் வாழைப்பழத்திற்குரிய விலையினை ஒரு வாழைப்பழத்திற்கு ரூ.1.25 லிருந்து ரூ.3.50/- ஆக உயர்த்தப்படுவது அவசியமாகிறது என்றும், மேலும், ஏப்ரல் 2022 மாதத்தின் மாதாந்திர அறிக்கையின்படி, வாழைப்பழம் சாப்பிடும் 684 பயனாளிகளுக்கு ஒரு வாழைப்பழத்தின் விலையினை ரூ.1.25/-லிருந்து ரூ.3.50/-ஆக உயர்த்துவதால் ஒரு ஆண்டிற்கு ஆகும் மொத்த செலவினம் ரூ.3,73,464/- என்றும், ஆண்டிற்கு கூடுதலாக ஏற்படும் செலவினம் ரூ.2,40,084/- என்றும் தெரிவித்து ஒரு வாழைப்பழத்தின் விலையினை ரூ.1.25/-லிருந்து ரூ.3.50/- ஆக உயர்த்தி வழங்குமாறு கேட்டுக் கொண்டுள்ளார்.

3. இயக்குநர் மற்றும் குழும இயக்குநர், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் அவர்களின் கருத்துருவினை கவனமுடன் பரிசீலனை செய்த அரசு அதனை ஏற்று, குழந்தைகள் மையங்களில் முட்டை சாப்பிடாத குழந்தைகளுக்கு வழங்கப்பட்டு வரும் வாழைப்பழத்தின் விலையினை ஒரு வாழைப்பழத்திற்கு ரூ.1.25 லிருந்து ரூ.3.50 ஆக உயர்த்தியும், இதன் பொருட்டு ஏற்படும் ஆண்டுக் கூடுதல் தொடர் செலவினம் ரூ.2,40,000/- ஐ (ரூபாய் இரண்டு இலட்சத்து நாற்பதாயிம் மட்டும்) ஒப்பளிப்பு செய்தும் ஆணையிடுகிறது.

4. மேலே பத்தி-3ல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட செலவினம் கீழ்க்கண்ட கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

| வ. எண். | கணக்குத் தலைப்பு | தொகை ரூ |
|---|---|---|
| 1 | "2236 சத்துணவு – 02 சத்துணவு மற்றும் பானங்கள் வழங்குதல் – 102 மதிய உணவு மத்திய மாநில அரசுகள் பொறுப்பேற்கும் திட்டங்கள் – UB புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்தின் கீழ் பயன் பெறுவோர்க்கு பல்வேறு உணவுப் பொருட்கள் வழங்குவதற்காகத் தொகை கொடுத்தல் – 367 உணவளிக்கும் / உணவுச் செலவுகள் – 08 வாழைப்பழம்". IFHRMS DPC: 2236-02-102-UB-36708 | 96,000 |

| | | |
|---|---|---|
| 2. | "2236 சத்துணவு – 02 சத்துணவு மற்றும் பானங்கள் வழங்குதல் - 102 மதிய உணவு மத்திய மாநில அரசுகள் பொறுப்பேற்கும் திட்டங்கள் – UF புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்தின் கீழ் பயன் பெறுவோர்க்கு பல்வேறு உணவுப் பொருட்கள் வழங்குவதற்காகத் தொகை கொடுத்தல் – மாநில அரசின் பங்கு - 367 உணவளிக்கும் / உணவுச் செலவுகள் – 08 வாழைப்பழம்".<br>IFHRMS DPC: 2236-02-102-UF-36708 | 96,000 |
| 3. | "2236 சத்துணவு – 02 சத்துணவு மற்றும் பானங்கள் வழங்குதல் – 793 ஆதி திராவிடர்களுக்கான சிறப்புக் கூறுகள் திட்டத்திற்கு மத்திய அரசின் சிறப்பு நிதியுதவி – மத்திய மாநில அரசுகள் பொறுப்பேற்கும் திட்டங்கள் – UD சிறப்புக் கூறுகள் திட்டத்தின் கீழ் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் சத்துணவுத் திட்டத்தின்கீழ் பயன் பெறுவோர்க்கு பல்வேறு உணவு பொருட்கள் வழங்குவதற்காகத் தொகை கொடுத்தல் - 367 உணவளிக்கும் / உணவுச் செலவுகள் – 08 வாழைப்பழம்".<br>IFHRMS DPC: 2236-02-793-UD-36708 | ரூ.24,000 |
| 4 | "2236 சத்துணவு – 02 சத்துணவு மற்றும் பானங்கள் வழங்குதல் – 793 ஆதி திராவிடர்களுக்கான சிறப்புக் கூறுகள் திட்டத்திற்கு மத்திய அரசின் சிறப்பு நிதியுதவி – மத்திய மாநில அரசுகள் பொறுப்பேற்கும் திட்டங்கள் – UH சிறப்புக் கூறுகள் திட்டத்தின் கீழ் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் சத்துணவுத் திட்டத்தின்கீழ் பயன் பெறுவோர்க்கு பல்வேறு உணவுப் பொருட்கள் வழங்குவதற்காகத் தொகை கொடுத்தல் – மாநில அரசின் பங்கு - 367 உணவளிக்கும் / உணவுச் செலவுகள் – 08 வாழைப்பழம்".<br>IFHRMS DPC: 2236-02-793-UH-36708 | ரூ.24,000 |
| | மொத்தம் | ரூ.2,40,000 |

5. மேலே பத்தி 3-ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்தினை மேற்கொள்ள தேவையான கூடுதல் நிதியொதுக்கம் ரூ.2,40,000/- 2022-2023 ம் ஆண்டிற்கான திருத்த மதிப்பீடு/இறுதி திருத்திய நிதியொதுக்கத்தில் ஒதுக்கீடு செய்யப்படும். இந்நிதியொதுக்கம் செய்ய இருப்பதை எதிர்நோக்கி, மேலே பத்தி-3ல் ஒப்பளிக்கப்பட்ட தொகையினை பெற்று வழங்கிட இயக்குநர் மற்றும் குழும இயக்குநர், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் அவர்களுக்கு அனுமதி அளிக்கப்படுகிறது. மேலும், பத்தி-3ல் அனுமதிக்கப்பட்ட இக்கூடுதல் செலவினத்திற்கான கருத்துருவை 2022-2023ஆம் ஆண்டிற்கான திருத்த மதிப்பீடு/இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் சேர்ப்பதற்கு தவறாது உரிய நேரத்தில் நிதி

(ச.ந.) த்துறைக்கு அனுப்பி வைக்குமாறு இயக்குநர் மற்றும் குழும இயக்குநர், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

6. இவ்வரசாணை நிதித்துறையின் அ.சா.எண்.40576/நிதி(சந)/2022, நாள் 22.08.2022-ல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது. இதற்கான கூடுதல் நிதியொதுக்கம் பேரேடு எண்.1007 (ஆயிரத்து ஏழு) (IFHRMS ASL No.2022081007).

(ஆளுநரின் ஆணைப்படி)

ஷம்பு கல்லோலிகர்,
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்

பெறுநர்
இயக்குநர் மற்றும் குழும இயக்குநர்
ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள், தரமணி,
சென்னை - 600 113.
சமூகநல இயக்குநர், சைதாப்பேட்டை, சென்னை - 600 015.
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள் / மாவட்டக் கருவூல அலுவலர்கள்
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை - 600 008.
முதன்மை மாநிலக் கணக்காயர், சென்னை – 600 018.
முதன்மை மாநிலக் கணக்காயர் (தணிக்கை –I & II), சென்னை – 600 018.
அனைத்து மாவட்டத் திட்ட அலுவலர்கள் (ஒருவதி) (இயக்குநர் மற்றும் குழும இயக்குநர், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள், சென்னை வழியாக)
நகல்
மாண்புமிகு அமைச்சர் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை - 600 009.
நிதித் (சந/வ.செ.பொது- II) துறை, சென்னை - 600 009.
இருப்பிட தணிக்கை அலுவலர், சென்னை - 600 009 (சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் (சந-2) துறை வழியாக)
இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

27/8/22
பிரிவு அலுவலர்
27/8/22